*07.11.2018 :-* **திருத்தந்தையின் மறைக்கல்வியுரை : உடமையாளர் என்பவர், இறைவனின் சார்பில் செல்வத்தை நிர்வகிப்பவரே**



**புதன் மறைக்கல்வியுரையில் இறைவனின் பத்துக் கட்டளைகளுள் ஏழாவது கட்டளை குறித்து, தன் சிந்தனைகளை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.**

அன்பு சகோதர சகோதரிகளே, பத்துக் கட்டளைகள் குறித்த நம் தொடர் மறைக்கல்வி உரையில் இன்று, **'களவு செய்யாதிருப்பாயாக'** என்ற ஏழாவது கட்டளை குறித்து நோக்குவோம். இந்தக் கட்டளை, குறிப்பாக, திருட்டைப் பற்றியும், பிறர் உடமைகளை மதிக்க வேண்டிய தேவை குறித்தும் எடுத்துரைக்கிறது. அதேவேளை, இறைவனின் படைப்பனைத்தும், மனித குலம் அனைத்திற்குமானது என்பதை நம் விசுவாச ஒளியிலும், திருஅவையின் சமூகப் படிப்பினைகளின் ஒளியிலும் புரிந்துகொள்ள வேண்டியதற்கான அழைப்பையும் இக்கட்டளை நமக்கு விடுக்கின்றது. படைப்பனைத்தும் அனைவருக்கும் பொதுவானது என்ற படிப்பினை, உடமைகள் மீது தனியாருக்கு இருக்கும் உரிமைகளை மறுக்கவில்லை, அதேவேளை, அந்த உரிமை, சரியான கண்ணோட்டத்துடன் அணுகப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. எந்த ஒரு உடமையையும் தனக்குரியதாக கொண்டிருக்கும் ஒருவர், இறைபராமரிப்பின் இடத்தில் அவ்வுடமையை நிர்வகித்து, அந்த உடமையை பலனுள்ளதாக மாற்றி, அதன் பலன்களை மற்றவர்களின் நலனுக்காக வழங்குபவராக செயல்பட வேண்டும் என கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி ஏடு போதிக்கிறது.

நாம் வாழும் இவ்வுலகம், பூமியில் வாழும் அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவுச் செய்வதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் தன்னுள் கொண்டுள்ளது. இருப்பினும், மனித குடும்பத்தின் எண்ணற்ற அங்கத்தினர்கள், தங்கள் அவசியத் தேவைகளை நிறைவேற்ற முடியாமலும், ஏன், பசியால் மடியும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். ஒருமைப்பாட்டுணர்வாலும், நீதியாலும் தூண்டுதல் பெறாத பொருளாதார கொள்கைகள் இதற்கு காரணமாக உள்ளன. அனைத்து வளங்களும் நிரம்பியவராக இருந்தாலும், நமக்காக ஏழையாக உருவெடுத்த இயேசுவின் எடுத்துக்காட்டு, அனைத்து வளங்களின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. அன்பு, விடுதலை, மனித மாண்பு என்பவைகளுக்கு பணி புரிவதே செல்வத்தின் நோக்கம் என்பது, மனித உருவெடுத்ததன் வழியே இயேசு வெளிப்படுத்திய உண்மை.

இவ்வாறு, தன் மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வெள்ளியன்று, **உரோமை ஆயரின், அதாவது திருத்தந்தையின், மறைமாவட்ட பேராலயமான இலாத்தரன் புனித ஜான் பசிலிக்காப் பேராலயம் திருநிலைப்படுத்தப்பட்டதன் நினைவு நாள் சிறப்பிக்கப்படவிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்.** உரோமை ஆயரான தனக்காக செபிக்கும்படிக் கேட்டுக்கொண்ட அவர், இறுதியில், அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார்.